News Paper Clippings appeared about Pondicherry University

THAMIZH MURASU DATED 12.04.2025

# புதுவை சமுதாய கல்லூரி மாணவர்கள் தூய்மை பணி

புதுச்சேரி, ஏப். 12-

புதுச்சேரி லாஸ்பேட்டையில் உள்ள புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள், புதிய கல்வி கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடத் திட்டத்தின் கீழ் "சமுதாய ஈடுபாடு" திட்டத்தின் ஒரு பகுதியாக, நேற்று உழவர்கரை நகராட்சியுடன் இணைந்து ஹெலிபேட் மைதானத்தை சுத்தம் செய்தனர்.



லாஸ்பேட்டை சமுதாயக் கல்லூரி மாணவர்கள், புதுச்சேரி நகராட்சியுடன் இணைந்து ஹெலிபேட் மைதானத்தில் தூய்மை பணியில் ஈடுபட்டனர்.

இதில் உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ் ராஜ், சுகாதார அதிகாரி டாக்டர் ராஜா, உதவி பொறியாளர் ஜெயசங்கர் ஆகியோர் பணியைத் தொடங்கி வைத்தனர். மாணவர்கள் மைதானத்தைச் சுற்றியுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றினர். சுத்தப்படுத்தல் பணிகளுடன், மக்களுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வையும் மாணவர்கள் ஏற்படுத்தினர். இதில் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன், பேராசிரியர்களான சுஜரிதா, இந்துமதி, வசந்தா கோகிலம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இப்பணியில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் சுமார் 50க்கும் மேற்பட்ட கலந்து கொண்டனர்.